ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1635/26 - 2010 ජනවාරි 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.01.07

1635/26 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி அபிவிருத்தி அமைச்சராகிய தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், இவ் அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் அதன் நேரொத்த பகுதியின் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள எல்லைகளையும் வரையறைகளைக் கொண்டுள்ளதுமான இடப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் அறிவிக்கின்றேன்.*

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,
நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சர்.

"செத்சிறிபாய",
பத்தரமுல்லை,
2010, சனவரி 5.

**அட்டவணை**

**பல்லேபொல நகர அபிவிருத்திப் பகுதி**

*நிரல் I*

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள பல்லேபொல செயலாளர் பிரிவின் கீழ்வரும் கி. சே. பி. இல. எகலபொல (416 E) பல்லேபொல வடக்கு (E 420 A) பல்லேபொல தெற்கு (E 420 E) கினிகமை (421 D) எக்கமுத்துக்கம (E 400D) மற்றும் பல்தெனியா பகுதி (E 421) எல்லைகளுக்கும் வரையறைகளிற்கும் அமைய II நிரல் இல் காட்டப்பட்டுள்ளது.

*நிரல் II*

**வடக்கு :**

எக்கமுத்துகம வீதியும் கொஸ்வத்தை வீதியும் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளியிலிருந்து 152 மீற்றர் தூரத்தில் எக்கமுத்துகம வீதியின் நடுக்கோட்டு ஓரமாக வடகிழக்காகக் கீறப்பட்ட கோடானது கலேவெல வீதியின் நடுக்கோட்டினை அடையும் வரை; பின்பு, கலேவெல வீதியின் நடுக்கோட்டோரமாக வடகிழக்காகக் கீறப்பட்ட கோடானது வேவல்தொட்ட வீதியின் நடுக்கோட்டிலிருந்து 10 மீற்றர் தூரம் வரை; பின்பு, வேவல்தொட்ட வீதியின் நடுக்கோட்டோரமாக வடகிழக்கு மற்றும் கிழக்காகக் கீறப்பட்ட கோடானது வேவல்தொட்ட வீதியின் நடுக்கோட்டை சந்திக்கும் வரை; பின்பு ஒலகன்வத்தை-அம்பொக்குதென வீதியின் நடுக்கோட்டோரமாக தென்கிழக்கு மற்றும் கிழக்காகக் கீறப்பட்ட கோடானது ஒலகன்வத்தை வீதியின் நடுக்கோட்டை அடையும் வரை; பின்பு, மேற்குறிப்பிடப்பட்ட வீதியின் நடுக்கோட்டோரமாகத் தென் கிழக்காகக் கீறப்பட்ட கோடானது புஸ்ஸபிட்டியா ஓயாவின் மத்திய கோட்டினை அடையும் வரை, வரையப்படம். வரையப்படும்.

**பல்லேபொல நகர அபிவிருத்திப் பகுதி** - (தொடர்ச்சி)

*நிரல் I*

*நிரல் II*

**கிழக்கு :**

மேற்குறிப்பிட்ட இறுதிப்புள்ளியிலிருந்து ஒரு கோடானது தென்கிழக்கு, தென்மேற்கு மற்றும் தென்கிழக்காக எகலபொல கி. சே.பி. (E 416) இன் கிழக்கு எல்லையை அடையும் வரை; பின்பு எகலபொல கி. சே. பி. (E 416) இன் வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது கினிகம கி. சே. பி. (E 421D) இன் வடக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, மேற்குறிப்பிட்ட கி. சே. பிரிவின் கிழக்கு மற்றும் தெற்கு எல்லைகள் ஓரமாக தென்கிழக்கு, தெற்கு மற்றும் தென்மேற்காக கீறப்பட்ட கோடானது பல்தெனியா கி. சே. பி. (E 421) தெற்கு எல்லையை அடையும் வரை வரையப்படும்.

**தெற்கு :**

இறுதியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து பல்தெனியா கி. சே. பி. (E 421) ஒரு நேர்கோடானது தென்மேற்காக வெலகெதற- எல மற்றும் மாத்தளை- பல்லேபொல வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை; பின்பு, தென்மேற்கு மற்றும் வடமேற்காக வெலகெதர- எல வரை; பின்பு, வலகெதர- எலவின் மத்திய கோட்டோரமாக வடமேற்காக கீறப்பட்ட கோடானது புஸ்ஸபிட்டியா ஓயாவின் நடுக்கோட்டினை அடையும் வரை கீறப்படும்.

**மேற்கு :**

மேற்குறிப்பிட்ட புள்ளியிலிருந்து புஸ்ஸபிட்டியா ஓயாவின் மத்தியகோடடோரமாக வடமேற்கு மற்றும் வடக்காகக் கீறப்பட்ட கோடானது பல்லேபொல தெற்கு கிராமசேவகர் பிரிவு(E 420 E) இன் தெற்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, பல்லேபொல தெற்கு கி. சே. பி. (E 420 E ) இன் தெற்கு எல்லையோரமாகத் தென்மேற்கு மற்றும் மேற்காகக் கீறப்பட்ட கோடானது மேற்குறிப்பிட்ட கி. சே. பி. மேற்கு எல்லையினை அடையும் வரை; பின்பு பல்லேபொல தெற்கு கி. சே. பி. (E 420 E ) இன் மேற்கு எல்லையோரமாக வடகிழக்கு மற்றும் வடமேற்காகக் கீறப்பட்ட கோடானது பல்லேபொல வடக்கு கி. சே. பி. (E 420 A) இன் தெற்கு மற்றும் மேற்கு எல்லையினை அடையும் வரை; பின்பு பல்லேபொல வடக்கு கி. சே. பி. (E 420 A ) இன் மேற்கு எல்லையோரமாக வடக்கு, வடகிழக்கு, வடமேற்கு, வடக்கு மற்றும் வடகிழக்காக கீறப்பட்ட கோடானது கொஸ்வத்தை வீதி மற்றும் எக்கமுத்துகம வீதிகள் ஒன்றை ஒன்று சந்திக்கும் புள்ளி வரை; பின்பு, எக்கமுத்துகம வீதியோரமாக வடகிழக்காகக் கீறப்பட்ட கோடானது தொடக்கப்புள்ளியினை அடையும் வரை வரையப்படும்.

1- 659

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.